பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 02 | வியாழக்கிழமை | 19.10.2023 | அதிர்வு 79

## காதல் விவகார தகராறில் ஒருவர் வெட்டிக் கொலை!

காதல் விவகாரத்தால் ஏற்பட்ட தகராறால் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இரத்தோட்டை – நிக்லோயாவத்த பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் 05▶

# நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல் கடிதத்தை நீதிச்சேவை ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளவில்லை

### அவருக்கு உயிர் அச்சுறுத்தலும் இருக்கவில்லை என்கிறார் நீதி அமைச்சர்



– சுடர் திலீபன் –

"முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல் கடிதத்தை நீதிச்சேவை ஆணைக்குழு ஏற்றுக் கொள்ளவில்லை. அதேவேளை, நீதிபதி ரி.சரவணராஜாவுக்குச் சட்டமா அதிபர் அழுத்தம் கொடுத்தார் என்று வெளியாகிய செய்திகள் 03▶



### ரணில் நாடு திரும்பியதும்

# உயர்மட்டத்தில் அதிரடி மாற்றம்




### கொழும்பு அரசியலில் பரபரப்பு

சீனாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும் அமைச்சரவையிலும், பாதுகாப்பு அணிகள் உட்பட அரசாங்கத்தின் உயர்மட்டத்திலும் அதிரடி மாற்றங்கள் இடம்பெறவுள்ளன என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. 02▶

### இலங்கையின் பொருளாதார நிலைமை:

# வியட்நாம் ஜனாதிபதியுடன் ரணில் தரப்பு முக்கிய பேச்சு



தென்கிழக்காசியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்புகளைப் பலப்படுத்திக் கொள்வதற்கான களமாக வியட்நாமை மாற்றியமைக்கத் தயார் எனவும், இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான 05▶

### இஸ்ரேல் - பாலஸ்தீனம் போர் தொடர்பான

## வெளிவிவகார அமைச்சின் அறிக்கை பக்கச்சார்பானது

### நிராகரித்தது எதிரணி

"இலங்கை அரசு இஸ்ரேலுக்குச் சார்பான வகையிலேயே அறிக்கை வெளியிட்டுள்ளது. பாலஸ்தீனத்திலுள்ள மக்கள் தொடர்பில் எதனையும் கூறவில்லை. இப்போது அங்கு நடப்பது போர்க்குற்றமே."

– இவ்வாறு எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். 05▶






நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் பற்றிய தகவலை நேற்று இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தேன்.

அது தொடர்பில் அக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆட்சேபமும் மறுப்பும் தெரிவித்தார்.

நேற்று எனது பத்தியில் –

"மற்றைய ஆறு தமிழ்க் கட்சிகள் 02▶

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒன்று சேர்ந்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முன்னெடுக்க அறிவித்துள்ள கடையடைப்புக்கு (ஹர்த்தாலுக்கு) தமது கட்சியின் ஆதரவையும் வேறு வழியின்றி வழங்குவது என்ற முடிவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு நேற்றிரவு இணைய வழியில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்து விட்டது.

எனினும், இந்தக் கூட்டத்தில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு 'செம' அர்ச்சனை என்று தகவல். கட்சியோடோ, கட்சியின் அடுத்த கட்ட தலைவர்களோடோ, அரசியல் குழுவோடோ கலந்துரையாடாமல், இதுபோன்ற கூட்டு முயற்சிகளில் கலந்து கொண்டு, தம்பாட்டில், சுய இச்சைப்படி, தலைவர் முடிவெடுத்து, பகிரங்கப்படுத்தி விட்டு வந்தால், அரசியல் குழு எதற்கு என்ற சாரப்பட பலரும் வெளுத்து வாங்கினர். மாவையருக்கு வெறுமனே செவிமடுத்துக் கொண்டிருப்பதைத் தவிர, வேறு வழி இருக்கவில்லை.

அந்தக் கடையடைப்புக்கு ஆதரவு தெரிவிப்பவராகத் தம்பாட்டில் முடிவெடுத்துத் தலைவர் அறிவித்துள்ள நிலையில், அவரைக் கைவிடக்கூடாது என்பதற்காகக் கடையடைப்பை ஆதரித்து ஓர் அறிவித்தலை – அறிக்கையை – வெளியிடுவதுடன் அடங்கிக் கொள்வது என்று அரசியல் குழு நேற்றிரவு முடிவு செய்ததாகத் தெரிய வந்தது.

அந்த அறிக்கையை வெளியிடும் பொறுப்பு நேற்றைய கூட்டத்தில் வைத்து சுமந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஏனையோருடன் கலந்தாலோசிக்காமல், அவசரக் குடுக்கையாக தலைவர் மாவை சேனாதிராஜா இத்தகைய விடயங்களில் தம்பாட்டில் முடிவெடுப்பதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீதரன், சுமந்திரன், சாணக்கியன் மற்றும் சிவஞானம் ஆகியோர் கண்டித்தனர். கலையரசன் எம்.பியும், கட்சிச் செயலாளர் டாக்டர் சத்தியலிங்கமும் இவ்விடயத்தை ஒட்டி அதிகம் கருத்து வெளியிடவில்லை."

– என்று குறிப்பிட்டு இருந்தேன்.

எனது நேற்றைய பத்தியில் குறிப்பிட்டிருப்பது போல அரசியல் குழு கூட்டத்தில் எதுவுமே நடக்கவே இல்லை, தம்மை யாருமே வையவேயில்லை என்று மறுத்தார் மாவை சேனாதிராஜா.

"கடையடைப்புத் தொடர்பாக ஏனைய கட்சிகளுடன் நடந்த கலந்துரையாடல்களில் நீங்களும் (மாவை சேனாதிராஜாவும்) உங்கள் மகனும் மட்டுமே தமிழரசுக் கட்சி சார்பில் பங்குபற்றினீர்கள். கட்சிக்குள் வேறு யாருடனும் இது குறித்துக் கலந்துரையாடப்படவில்லையே...!" என்ற என் கருத்தை அவர் ஏற்கவில்லை.

"கடையடைப்புத் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஹக்கீமுடன் எமது கட்சியின் எம்.பியான சுமந்திரன் பேசவில்லையா? அது அப்படி?" – என்று கேள்வி எழுப்பினார் மாவை சேனாதிராஜா .

"ஆம். அது உண்மை. 'சித்தார்த்தன் கேட்டுக் கொண்டதன் பேரில் ஹக்கீமுடன் பேசி, அவரின் பதிலை சித்தார்த்தனுக்கு தெரியப்படுத்தினேனே தவிர, எனக்கும் கடையடைப்பு முடிவுக்கு எந்தத் தொடர்புமோ சம்பந்தமுமோ இல்லை' என்று சுமந்திரன் அளித்த விளக்கம் சில தினங்களுக்கு முன்னரே என் பத்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது" – என்று விளக்கினேன்.

எனினும், எனது விளக்கத்தை அவர் செவிமடுப்பவராகவோ விளங்கிக் கொள்பவராகவோ தெரியவில்லை. எனவே தொலைபேசி உரையாடலை அத்துடன் முடித்துக் கொண்டேன்.

ஆயினும், எனது பத்தியில் குறிப்பிட்ட தகவலை மாவை சேனாதிராஜா என்னுடன் தொடர்பு கொண்டு மறுத்தார், ஆட்சேபித்தார் என்ற தகவலை வாசகர்களுடன் பகிர வேண்டும் என்பதற்காக அதனை இங்கு பதிவு செய்கிறேன்.

அந்த அரசியல் குழு கூட்டத்தில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா தவிர, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், சி.ஸ்ரீதரன், இரா. சாணக்கியன், கலையரசன் மற்றும் சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி. கே.சிவஞானம், பதில் பொதுச் செயலாளர் டாக்டர் சத்தியலிங்கம் ஆகியோர் பங்கு பற்றியிருந்தனர். இந்த அறுவரில் நால்வருடன் மட்டும் நேற்று எனக்குத் தொடர்பு கொள்ள முடிந்தது . எனது பத்தித் தகவலை கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா மறுத்திருக்கின்றார், அப்படி ஒருவரும் தன்னை வையவில்லை என்று அவர் கூறுகின்றார். அந்தப் பத்தி தொடர்பில் உங்கள் அவதானிப்பு என்ன என்று நால்வரிடமும் கேட்டேன். நால்வரின் சுருக்கமான பதிலையும் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

1."நீங்கள் எழுதியவை எல்லாம் சரி. ஒன்றும் பிழையில்லை. ஆனால் மாவையரைக் கொஞ்சம் கூட அம்பலப்படுத்தி விட்டீர்கள். குறைத்து இருக்கலாம்."

2."முற்றிலும் சரி. ஒரு பிழையும் இல்லை. நடந்ததைத்தான் எழுதி இருக்கின்றீர்கள்."

3."கனகச்சிதமான பத்தி. சரியாக நடந்த விடயங்களைப் பிரசுரித்திருக்கின்றீர்கள்."

4. "இன்னும் அதிக விடயங்கள் நடந்தன. மாவைக்குக் கிடைத்த அர்ச்சனைகளின் தீவிரத்தைக் குறைத்துக் காட்டி விட்டீர்கள்."

– இவை அந்த நால்வரின் கருத்துகள்.

என்னுடைய நேற்றைய பத்தியில் வெளியான விடயங்கள் தொடர்பில் மாவை சேனாதிராஜா அவர்கள், மேற்படி அரசியல் குழுக் கூட்டத்தில் பங்கு பற்றிய தமது கட்சிச் சகாக்களுடன் ஒரு தடவை மீள உரையாடி விட்டு, அவர்களின் கருத்துக்களையும் உள்வாங்கித் தமது தரப்பில் நியாயம், மறுப்பு ஏதும் இருப்பின் அவற்றையும் உள்ளடக்கி, விவரமான மறுப்பு ஒன்றை எழுத்தில் அனுப்புவாராயின், முழு விளக்கத்துடன் அவற்றை வாசகர்கள் முன்பாக அப்படியே வைக்கத் தயாராக இருக்கிறேன்.

ஆக, இவ்விடயத்தில் இனி பந்து கட்சி தலைவர் மாவையின் களத்திற்குள்...!

## உயர்மட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சரவை மாற்றம் கட்டாயம் இடம்பெறும் என்றும், இதன்போது தற்போதைய சுகாதார அமைச்சரும் விளையாட்டுத்துறை அமைச்சரும் மாற்றப்படலாம் என்றும் அறியமுடிகின்றது.

பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்னவின் மூன்று வார கால பதவி நீடிப்பு இந்த மாத இறுதியில் முடிவடைகின்ற நிலையில், புதிய பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோனின் பெயர் அரசமைப்புச் சபைக்குச் சிபாரிசு செய்யப்பட்டு அவருக்குப் பதவி கிடைக்க வாய்ப்புள்ளது என்றும் தெரியவருகின்றது.


தேசபந்து தென்னக்கோனுக்குப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆதரவு அளித்துள்ளார் என்றும் அறியமுடிகின்றது.

இதேவேளை, 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வியைச் சந்தித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சொந்தக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் மீண்டும் ஒன்றிணைவதற்கு முயற்சிக்கின்றது என்றும், கட்சியை மீண்டும் ஒன்றிணைத்து வலுப்படுத்துவதற்காக சிரேஷ்ட உறுப்பினர்கள் அனைவரும் நவம்பர் மாதத்துக்குப் பின்னர் கிராம மட்டத்திலிருந்து பிரசாரத்தை ஆரம்பிக்கவுள்ளனர் என்றும் தெரியவருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் பொதுத் தேர்தலில் பரந்த கூட்டணியின் கீழ் போட்டியிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.



# பொலிஸ்மா அதிபரை நீக்கிய அரசமைப்பு சபை சீனாவில் இருந்து மீண்டும் நியமித்த ஜனாதிபதி



பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் (பொலிஸ் திணைக்களத்துக்குப் பொறுப்பான) டிரான் அலஸ் ஆகியோர் நாட்டில் இல்லாத நிலையில், பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்னவை பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்குவதற்கு அரசமைப்பு சபை நேற்றுமுன்தினம் எடுத்த முடிவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு மணித்தியாலத்துக்குள் மாற்றியமைத்தார்.

பொலிஸ்மா அதிபரை மீண்டும் நியமிப்பது தொடர்பான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து உத்தரவுகளையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீனாவின் பீஜிங்கிலிருந்து உடனடியாக வழங்கியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதியும், பொலிஸாருக்குப் பொறுப்பான அமைச்சராக டிரான் அலஸும் இலங்கையில் இல்லாதபோது, பொலிஸ்மா அதிபரை அரசமைப்புச் சபை நீக்கியது பாரிய தவறு என அரசின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது வெளிநாடு சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்னும் இரண்டு நாட்களில் நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படும் நிலையில் பொலிஸ்மா அதிபரின் பதவி நீக்கம் சதித்திட்டமா என சந்தேகம் நிலவுவதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி இலங்கைக்கு வருவதற்கு முன்னர் போதைப்பொருள் கடத்தல்காரரைப் பாதுகாப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதை உடனடியாகக் கண்டறியவுள்ளதாக அந்தச் சிரேஷ்ட அமைச்சர் தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதியும் பொலிஸுக்குப் பொறுப்பான மக்கள் பாதுகாப்பு அமைச்சரும் நாட்டில் இல்லாத வேளையில் பொலிஸ்மா அதிபரை பதவியில் இருந்து நீக்குவது நாட்டிலுள்ள முழுப் பொலிஸ் திணைக்களத்தையும் முடக்குவதற்குச் சமமானது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## நீதிபதி சரவணராஜா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடிப்படையற்றவை. அத்துடன் இந்த நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் இருக்கவில்லை என்று நீதிச்சேவை ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது."

– இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நீதித்துறைச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறிய அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி சரவணராஜா 2023.09.23 ஆம் திகதி நீதிச்சேவை ஆணைக்குழுவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி அதில் உயிர் அச்சுறுத்தல் மற்றும் மன அழுத்தம் காரணமாகத் தான் பதவி விலகுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நீதிபதிகளுக்கு மன அழுத்தம் இருப்பது வழமை. மன அழுத்தத்தால் பதவி விலகுவதாக இருந்தால் இலங்கையிலுள்ள சகல நீதிபதிகளும் பதவி விலக நேரிடும். நீதிபதிகளுக்கு மாத்திரமல்ல சட்டத்தரணிகளுக்கும் மன அழுத்தம் உள்ளது. நாடாளுமன்றம் வரும் எமக்கும் மன அழுத்தம் உள்ளது. சபாபீடத்தில் அமர்ந்துள்ள சபாநாயகருக்கும் மன அழுத்தம் உள்ளது. அவ்வாறானால் அவரும் பதவி விலக நேரிடும்.

தனக்கு ஏற்பட்டுள்ள உயிர் அச்சுறுத்தல் காரணமாகப் பதவி விலகுவதாக நீதிபதி கடிதத்தில் குறிப்பிட்டுள்ள போதும் அது எந்த வகையானது, யாரால் விடுக்கப்பட்டது என்பது தொடர்பிலோ, தனக்கு ஏற்பட்டுள்ளது எந்த வகையான மன அழுத்தம் என்பது தொடர்பிலோ எதுவுமே குறிப்பிடவில்லை.

தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருந்தால் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரம் நீதிபதிக்கு முழுமையாக வழங்கப்பட்டுள்ளது. உயிர் அச்சுறுத்தல் விடுத்த நபருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்க முடியும். பொலிஸ்மா அதிபருக்கு அறிவிக்க முடியும். அந்த அதிகாரம் எமக்குக் கூட இல்லை. ஆனால், அந்த நீதிபதி எந்த அதிகாரத்தையும் பயன்படுத்தவில்லை.

நீதிபதியின் பதவி விலகல் மற்றும் அதற்கு அவர் குறிப்பிட்ட காரணிகள் தொடர்பில் நீதிச்சேவை ஆணைக்குழு உரிய விசாரணைகளை மேற்கொண்டது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் அதிகாரிகள் முல்லைத்தீவுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு எனக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள். நீதிச்சேவை ஆணைக்குழு மூன்று விடயங்களை அறிவுறுத்தியுள்ளது.

முதலாவதாக, நீதிபதி சரவணராஜா 2023.09.23 ஆம் திகதி என்று பதிவிடப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய உயிர் அச்சுறுத்தல் அல்லது மன அழுத்தம் தொடர்பில் அவர் நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கோ, ஆணைக்குழுவின் செயலாளருக்கோ, நீதிச்சேவை ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கோ அல்லது தன்னுடன் இணக்கமாகச் செயற்பட்ட தரப்பினருக்கோ எவ்விதத்திலும் அறிவுறுத்தவில்லை.

இரண்டாவதாக, நீதிபதி சரவணராஜாவை பிரதிவாதியாக்கிப் பெயர் குறிப்பிட்டு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விவகாரம் தொடர்பில் நீதிபதி சரவணராஜா 2023.09.23 மற்றும் அதனை அண்மித்த காலப்பகுதியில் நீதிச்சேவை ஆணைக்குழுவுடன் தொடர்பு கொண்டிருந்தார். அவ்வேளையில் அவர் தனக்கு உயிர் அச்சுறுத்தல் மற்றும் மன அழுத்தம் இருப்பதாகக் கூறவில்லை.

நீதிபதி சரவணராஜாவை சட்டமா அதிபர் அழைத்து வழக்குத் தீர்ப்பை மாற்றியமைக்குமாறு அழுத்தம் கொடுத்தார் என்று ஒரு சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. இதனை முழுமையாக நிராகரிக்கின்றோம்.

நீதிபதி ரி.சரவணராஜா வழங்கிய கட்டளைகளுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. வழக்குகளில் நீதிபதியின் பெயர் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்கள் குறித்து சட்டமா அதிபரிடம் நீதிபதி ஆலோசனை கோரியுள்ளார். வழக்கில் தனக்காக முன்னிலையாகுமாறு நீதிபதி சரவணராஜா சட்டமா அதிபரிடம் வலியுறுத்தியுள்ளார். அதற்கு சட்டமா அதிபர் இணக்கம் தெரிவித்துள்ளார். இதைத் தவிர சட்டமா அதிபருக்கும், நீதிபதிக்கும் எவ்வித பேச்சும் இடம்பெறவில்லை. எனவே, நீதிபதிக்குச் சட்டமா அதிபர் அழுத்தம் பிரயோகிக்கவில்லை என்பதை பொறுப்புடன் குறிப்பிட்டுக்கொள்கின்றேன்.

மூன்றாவதாக, நீதிபதி சரவணராஜா 2023.08.29 ஆம் திகதி நீதிச்சேவை ஆணைக்குழுவிடம் 2023.09.23 ஆம் திகதி முதல் 2023.10.01 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்தியாவில் உள்ள தனது நோயாளியான உறவினரைப் பார்ப்பதற்குச் செல்ல வேண்டும் என்றும், ஆகவே தனக்கு வெளிநாட்டு விடுமுறை வழங்குமாறும் கோரியுள்ளார். அதற்கமைய நீதிச்சேவை ஆணைக்குழு விடுமுறை வழங்கியுள்ளது.

நீதிபதியின் பதவி விலகலைத் தொடர்ந்து நாட்டில் நீதித்துறை இல்லாமல் போய்விட்டது என்று பலர் குறிப்பிடுவது கவலைக்குரியது. இந்த நீதிபதி தொடர்பில் அவரது மனைவி நீதிச்சேவை ஆணைக்குழுவில் முறைப்பாடு அளித்துள்ளார். நீதிச்சேவை ஆணைக்குழு அந்த முறைப்பாடு தொடர்பில் ஆராய்ந்து நீதிபதியிடம் ஒருசில விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளது. அவரது தனிப்பட்ட விடயங்களை நாங்கள் ஆராயவில்லை.

இதேவேளை, நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல் கடிதத்தை நீதிச்சேவை ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளவில்லை. உரிய தீர்மானத்தை ஆணைக்குழு எடுக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். இந்த விடயத்தில் தலையிட எங்களுக்கு அதிகாரம் இல்லை." – என்றார்.

# ஜனாதிபதியின் பணிப்புரைகளை பொலிஸார் செயற்படுத்தவில்லை

## சபையில் சாணக்கியன் காட்டம்



மட்டக்களப்பு மயிலத்தமடு – மாதவனை மேய்ச்சல் தரை விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி வழங்கிய பணிப்புரைகளை பொலிஸார் செயற்படுத்தவில்லை. நாட்டில் பொலிஸ்மா அதிபர் இல்லாத நிலையில் எவரிடம் இது தொடர்பில் முறையிடுவது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை ஒழுங்குப் பிரச்சினையொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு :-

ஜனாதிபதி தற்போது நாட்டில் இல்லை. பொலிஸ'க்குப் பொறுப்பான அமைச்சரும் நாட்டில் இல்லை. அத்துடன் பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ள சேவைகால நீடிப்பும் சட்டவிரோதமானது. பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்ட பதவி நீடிப்புக்கு அரசமைப்புப் பேரவை அனுமதி வழங்கவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை ஜனாதிபதி வெளிநாடு செல்லும் போது நியமிக்கப்படுபவர்களை அரசமைப்பு பேரவையால் நீக்க முடியாது என்று இன்னொரு தரப்புக் கூறுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி தலைமையில் விசேட கூட்டமொன்று இடம்பெற்றது. மயிலத்தமடு – மாதவனை மேய்ச்சல் தரைப் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி வழங்கிய பணிப்புரையை இன்று வரையில் பொலிஸாரால் மட்டக்களப்பில் செயற்படுத்தவில்லை.

பொலிஸ்மா அதிபர் பதவிக்கு மூவரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது. இவர்கள் மூவர் தொடர்பிலும் பிரச்சினை இருந்தால் நாடாளுமன்றத்தின் ஊடாகக் கலந்துரையாடி அதற்குத் தீர்வு காண வேண்டும். பொலிஸ்மா அதிபர் இல்லாத நேரத்தில் நாங்கள் பிரச்சினைகளை யாரிடம் கூறுவது?

மட்டக்களப்பில் செயற்படுத்துமாறு ஜனாதிபதி கூறியவற்றை யார் செயற்படுத்தப் போகின்றார்கள்? அது தொடர்பில் யாரைக் கேட்பது? நாட்டில் சட்டத்தை செயற்படுத்துவதற்கு யார் பொலிஸ்மா அதிபராக இருக்கின்றார் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

நாட்டில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் போன்ற சம்பவம் மீண்டும் நடந்தால் அதற்கு யார் பொறுப்பு கூறுவது? இது தொடர்பில் ஆளும் கட்சியில் பொறுப்புடன் ஒருவர் பதிலளிக்க வேண்டும் என்று கேட்கின்றேன். – என்றார்.

இதன்போது எழுந்து பதிலளித்த பிரதமர் தினேஷ் குணவர்தன எதனைக் கேட்பது என்று தெரியாமக் குழம்பிக் கொண்டே அவர் கேட்கிறார். ஜனாதிபதியின் பெயரைக் குறிப்பிட்டு அண்மையில் நாடாளுமன்றத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்.

அந்தப் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி இவர்களையும், அதிகாரிகளையும் அழைத்துப் பேசினார். சில விடயங்கள் தொடர்பில் இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டது. அது தொடர்பில் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ஆலோசனைகளை வழங்கியுள்ளார். அது தொடர்பில் சீனா செல்ல முன்னர் என்னிடமும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஆகவே அந்தப் பிரச்சினையை அத்துடன் நீக்கிக்கொள்ளுங்கள். ஜனாதிபதியே பாதுகாப்பு அமைச்சர். அவர் எங்கு இருந்தாலும் தேவையான ஆலோசனைகளை வழங்குவார் என்றார்.

இதனை தொடர்ந்து ஒழுங்கு பிரச்சினையை எழுப்பி எழுந்த சுயாதீன உறுப்பினர் நிமல் லான்சா, இந்த சபையில் ஜனாதிபதி இல்லாத நேரத்திலேயே இவ்வாறு பேசுகின்றார், இவ்வாறு கருத்து முன்வைக்க முடியாது என்றார்.

இவ்வேளையில் சாணக்கியன் குறுக்கிட்டு கருத்து தெரிவிக்க முயன்ற போது, இருவருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதன்போது கருத்து தெரிவித்த சாணக்கியன் இவரை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு சபாநாயகரை கோருகின்றேன் என்றார்.

தொடர்ந்து மீண்டும் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா –

நான் சபாநாயகரிடமே பேச சந்தர்ப்பம் கேட்டேன். நான் சுமந்திரனிடம் கேட்கவில்லை, சாணக்கியனிடம் கேட்கவில்லை. தமிழ், ஆங்கிலம், சிங்களம் எதுவும் உங்களுக்கு தெரியாதா ? சபையில் இல்லாத ஒருவர் பற்றி இங்கே கூறுவது தவறே. இதனால் அந்த கருத்துக்களை ஹன்சாட்டில் இருந்து நீக்குங்கள்.

ஜனாதிபதி பிரச்சினையொன்று தொடர்பில் பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். இல்லையென்றால் அவர் வந்த பின்னர் சந்தித்து கதையுங்கள். இப்போது ஜனாதிபதி சீனாவுக்கு முக்கிய விடயமாகவே சீனாவுக்கு சென்றுள்ளார். அவர் இந்த சபையில் இல்லாத நேரத்தில் அவர் பற்றி கூறியவற்றை நீக்கிவிடுங்கள். – என்றார்.

# புத்தளத்தில் ஆணின் சடலம் மீட்பு!

– புத்தளம் நிருபர் –

புத்தளம் பகுதியில் நேற்றுக் காலை இனந்தெரியாத ஆணொருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

புத்தளம் – கொழும்பு முகத்திடலில் ஒருவர் உயிரிழந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டதை அவதானித்த மக்கள், பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

இதையடுத்து சம்பவ இடத்துக்குப் பொலிஸார் மற்றும் தடவியல் பொலிஸார் விரைந்து சடலத்தைப் பார்வையிட்டனர்.

பின்னர் சம்பவ இடத்துக்குப் புத்தளம் கற்பிட்டிக்கான திடீர் மரண விசாரணை அதிகாரி வந்து சடலத்தைப் பார்வையிட்டதுடன் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார்.

சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் மற்றும் தடவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முல்லைத்தீவின் எல்லையோரக் கிராமங்களில் அதிகரித்துள்ள காட்டு யானைகளின் அட்டகாசம்

## 1,600 க்கும் மேற்பட்ட தென்னம்பிள்ளைகள் நாசம்





(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட எல்லைக்கிராமங்களான கொக்குதொடுவாய் வடக்கு, கருநாட்டுக்கேணி ப் பகுதிகளில் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் பலரது தென்னந்தோட்டங்கள் நாசமாகியுள்ளன.

காட்டு யானைகளின் அட்டகாசத்தைத் தடுத்து, தமக்கு வழிவகை செய்யுமாறு கோரி அந்தக் கிராம மக்கள் நேற்றைய தினம் அப்பகுதியில் ஒன்று திரண்டிருந்தனர்.

கடந்த இரண்டு, மூன்று தினங்களாக தொடர்ச்சியாக காட்டு யானைகள் அப்பகுதியிலுள்ள தென்னந் தோட்டங்களுக்குள் கூட்டம் கூட்டமாக புகுந்து தென்னை மரங்களை சேதப்படுத்தி வருகின்றன.

இந்தப் பகுதியில் யானைகளின் அட்டகாசத்தால் கிட்டத்தட்ட 1600 க்கும் மேற்பட்ட தென்னம்பிள்ளைகள் அழிவடைந்துள்ளன. அத்தோடு 6 ஏக்கரில் பயிரிடப்பட்ட கச்சான், ஒரு ஏக்கரில் பயிரிடப்பட்ட மாதுளை செய்கை என்பன முற்றாக அழிவடைந்துள்ளன.

யானைகளினால் தாம் அப்பகுதியில் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், கொக்குளாய் விவசாய போதனாசிரியர் தனபாலசிங்கம் துளசிராம், கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன் போன்றோர் நேற்று அங்கு நேரில் சென்று பாதிப்படைந்த இடங்களைப்வ்பார்வையிட்டனர். மக்களின் பிரச்சினைகளையும் கேட்டறிந்தனர்.

## காதல் விவகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த 39 வயதுடைய நபர் மாத்தளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் அப்பகுதியில் வசிக்கும் 5 சந்தேகநபர்களை இரத்தோட்டைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபரின் மகளுடன் ஏற்பட்ட காதல் காரணமாக மூண்ட மோதலால் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

## வியட்நாம் ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொருளாதார, சமூக, கலாசார தொடர்புகளைப் பலப்படுத்தும் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் வியட்நாம் ஜனாதிபதி வோ வென் தோக் தெரிவித்தார்

சீனாவில் நடைபெறும் பெல்ட் அண்ட் ரோட் முன்னெடுப்புத் திட்டத்தின் மூன்றாவது சர்வதேச மாநாட்டுக்கு இணையாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வியட்நாம் ஜனாதிபதி வோ வென் தோக்குக்கும் இடையிலான இரு தரப்பு சந்திப்பு நேற்று பீஜிங் நகரில் நடைபெற்றது.

இரு நாடுகளிலும் தாக்கம் செலுத்தும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் இரு நாட்டுத் தலைவர்களும் கலந்தாலோசித்த அதேவேளை, இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான இரு தரப்பு தொடர்புகளைப் பலப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இரு நாடுகளினதும் வெளிவிவகார அமைச்சர்களின் தலைமையில் செயல்திட்டம் ஒன்றை உருவாக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கையின் பொருளாதார நிலைமை மற்றும் எதிர்கால எதிர்பாப்புக்கள் தொடர்பில் மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க இதன்போது விளக்கமளித்தார்.

சரிவடைந்திருந்த வியட்நாம் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பப் பின்பற்றிய செயன்முறைகள் தொடர்பிலும், அதன்போது எதிர்கொண்ட சவால்கள் தொடர்பிலும் வியட்நாம் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இரு நாடுகளுக்கும் இடையில் பொருளாதார மற்றும் வர்த்தகத் தொடர்புகளைப் பலப்படுத்திக்கொள்வது தொடர்பிலும், இலங்கையில் விவசாயத்துறையை நவீனமயப்படுத்துவது தொடர்பிலும் இரு நாட்டுத் தலைவர்களும் கலந்தாலோசித்தனர்.

ஒன்றிணைந்து முன்னோக்கிச் செல்லும் பாதைக்கான புதிய பிரவேசம் தொடர்பிலும் இந்தச் சந்திப்பின் போது ஆராயப்பட்டது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உள்ளிட்டவர்களும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

## வெளிவிவகார அமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நீதித்துறை சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மத்திய கிழக்கில் பெரும் யுத்தம் நிலவுகின்றது. இந்த விடயம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பில் நான் அதிர்ச்சியடைந்தேன். அறிக்கை காஸாவில் உள்ள இலங்கையர்களை மீட்க நடவடிக்கை எடுப்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது. இஸ்ரேலில் மக்களை இலக்கு வைத்து ஹமாஸ் தாக்குதல் நடத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் ஹமாஸ் தாக்குதலை நாங்கள் கண்டிக்கின்றோம். அதேபோன்று ஹமாஸ் இயக்கத்தால் பிடித்துச் செல்லப்பட்ட இஸ்ரேலியர்களை விடுவிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனை நாங்கள் வரவேற்கின்றோம்.


ஆனால், காஸாவில் வாழும் முஸ்லிம் மக்கள் தொடர்பில் ஒரு வசனமும் அதில் இல்லை. அங்கு 4 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். வைத்தியசாலை மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 500 பேர் உயிரிழந்துள்ளனர். அங்கு உணவு, நீர் இல்லை. 400 கட்டடங்கள் அழிக்கப்பட்டுள்ளன. சுய பாதுகாப்புக்கான உரிமை இஸ்ரேலுக்கு உள்ளது. ஆனால், சுய பாதுகாப்பையும் கடந்து செயற்படுகின்றது.

இங்கே முன்னாள் ஜனாதிபதி இருக்கின்றார். அவர் பலஸ்தீனத்துடன் நெருக்கமாகச் செயற்பட்டுள்ளார். காஸா மீது நடத்தப்பட்டுள்ள தாக்குதல் போர்க்குற்றம் என்று ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஹமாஸ் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது என்பதற்காக காஸாவில் உள்ள அனைத்து மக்களும் பழியாக முடியாது. காஸாவில் உள்ள முஸ்லிம் மக்கள் தொடர்பில் அரசின் அறிக்கையில் எந்த விடயமும் இல்லை. இந்த அறிக்கையை நாங்கள் முழுமையாக நிராகரிக்கின்றோம். இது முழுமையாக இஸ்ரேல் பக்கத்துக்காகத் தயாரிக்கப்பட்ட அறிக்கையே.

நாடு என்ற ரீதியில் வாழும் உரிமை இஸ்ரேலுக்கு உள்ளது. பாலஸ்தீனத்துக்கும் அவ்வாறான உரிமை உள்ளது. ஆனால், அந்த உரிமை பாலஸ்தீனத்துக்கு வழங்கப்படவில்லை. இப்போது அங்கு நடப்பது போர்க்குற்றமே.”

– என்றார்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மற்றோர் அரச அடாவடி

'வழித் தேங்காயைத் தெருப் பிள்ளையாருக்கு உடைப்பது' குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறோம். அத்தகைய வேலை ஒன்றை இப்போது செய்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

தமிழ் மக்களின் மதப் பாரம்பரிய அடையாளங்கள் பொதிந்து கிடக்கும் கீரிமலை நகுலேஸ்வரம் பகுதியில் உள்ள பிரதேசத்தை உயர் பாதுகாப்பு வலயத்துக்குத் தேவை என்று காட்டி, அடாத்தாக அதனை ஆக்கிரமித்த இலங்கை ஆட்சிப் பீடம், அந்த நிலங்களின் சொந்தக்காரர்களின் அனுமதியின்றி, அங்கே ஜனாதிபதி மாளிகை என்ற பெயரில் ஒரு கட்டடத்தைக் கட்டி வைத்துக்கொண்டு, இப்போது அதனை அரச பங்களிப்புக் கொண்ட தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு ஐம்பது வருடங்களுக்குக் குத்தகைக்கு வழங்கியிருக்கின்றது.

இந்து ஆலயங்கள், மடங்கள், சித்தர்களின் சமாதிகள் போன்றவை அமைந்திருக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புராதன பிரதேசமே இப்படி பலவந்தமாக - அடாத்தாக - தமிழ் மக்களிடமிருந்து பிடுங்கப்பட்டிருக்கின்றது. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கீரிமலை ஆதி சிவன் கோவில், சடையம்மா மடம், உச்சிப்பிள்ளையார் கோயில், கதிர்காம யாத்திரை தொடங்கும் முருகன் ஆலயம் ஆகியவை அமைந்திருந்த இடங்களில், அவை முழுமையாக இடித்து அழிக்கப்பட்டு, இந்த ஜனாதிபதி மாளிகை யுத்த சூழ்நிலையைச் சாக்காகப் பயன்படுத்திக் கட்டப்பட்டது.

ஒருபுறம் குருந்தூர்மலை போன்ற பகுதிகளில் புராதன சைவத்தலங்கள், பௌத்த விகாரைகளாகக் காட்டும் அநீதி. மறுபுறம் தனித்து இந்து - சைவ அடையாளங்களுடன் அமைந்த புராதன இடங்களை ஆக்கிரமித்து, சைவ மத பாரம்பரியத் தொன்மைகளை இடித்தழித்து, ஜனாதிபதி மாளிகை என்ற பெயரில் எதேச்சாதிகாரமாக கட்டடம் எழுப்பும் அட்டகாசம்.

இப்போது இந்த ஜனாதிபதி மாளிகையை ஐம்பது வருடக் குத்தகைக்குப் பெற்றுள்ள கல்வி நிறுவனத்தின் முன்னைய மோசடிகள், சீர்கேடுகள் தொடர்பில் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டு இருக்கின்றது. பொது நிறுவனங்களின் ஊழல்கள், மோசடிகள் குறித்து விசாரிக்கும் 'கோப்' நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முன்னைய தலைவர் பேராசிரியர் சரித்த ரத்வத்தையே இவ்விடயம் குறித்து நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருக்கின்றார். இத்தகைய மோசடிகள் நிறைந்த நிறுவனத்திற்கு யாழ்ப்பாண மக்களின் நிலத்தில் கட்டப்பட்ட அரச கட்டடத்தை ஐம்பது வருடக் குத்தகைக்கு ஒப்படைப்பது எங்ஙனம் நியாயம் என்று அவர் வினாவியிருக்கின்றார்.

பொதுமக்களின் இந்தக் காணிகளை அரசு இன்னும் முறையாக - சட்டப்படி - சுவீகரிக்கக் கூடவில்லை. அவை சட்ட நிலுவையில் உள்ளன. அப்படி இருக்கையில் வழித் தேங்காயைத் தெருப் பிள்ளையாருக்கு உடைக்கும் அதிகாரபீடத்தின் இந்த அடாவடிக்கு எதிராக நீதிமன்றம் செல்வது தவிர்க்க முடியாத கட்டாயமாகும்.

# தேர்தல் நடந்தே தீரும் சந்தேகம் வேண்டாம்!

## சபையில் பிரதமர் உறுதி

"தேர்தலை நாம் இரத்துச் செய்யவில்லை. தேர்தல் நடத்துவது தொடர்பில் அரசு உறுதியான நிலைப்பாட்டிலேயே உள்ளது. நாடு வங்குரோத்து நிலையில் இருந்தபோதே உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பில் அறிவிக்கப்பட்டது. அந்தநிலையிலேயே நிதி அமைச்சின் செயலாளர் போதியளவு நிதியை வழங்க முடியாது எனத் தெரிவித்திருந்தார்."

– இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தேர்தல் சட்ட திருத்தம் தொடர்பான கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுத்தபோது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அது தொடர்பில் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பல்வேறு சிக்கல்கள் காணப்படுவதால் தேர்தல் முறைமையை மாற்றுவது தொடர்பில் நாட்டு மக்கள் அனைவரும் பெரும் எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

சில பகுதிகளுக்கு உறுப்பினர்கள் இல்லாமல் போவதால் ஏற்படும் நிலைமை தொடர்பிலும் அனைவரும் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.

அதனைக் கருத்தில்கொண்டு அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் கலந்துரையாடலில் அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நாடு வங்குரோத்து நிலையில் இருந்தபோதே உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் அறிவிக்கப்பட்டது. அந்த நிலையிலேயே நிதி அமைச்சின் செயலாளர் போதியளவு நிதியை வழங்க முடியாது எனத் தெரிவித்திருந்தார்.

தனிப்பட்ட ரீதியில் தேர்தலுக்குச் செலவிடுவதற்கு நிதி கிடைக்கலாம். ஆனால், அரசு என்ற வகையில் அதற்கான நிதியை விடுவிக்க முடியாத நிலையிலேயே தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்றத் தேர்தல் முறைமையில் திருத்தம் மேற்கொண்டு கலப்புத் தேர்தல் முறைமை ஒன்றைக் கொண்டு வருவோம் என நாட்டுக்குத் தெரிவித்தே மக்கள் ஆணையை நாம் பெற்றுக்கொண்டுள்ளோம்.

அது தொடர்பில் எமது அரச தலைவர்கள் இந்த நாடாளுமன்றத்தில் பல தடவைகள் தெரிவித்துள்ளார்கள். நாம் வரவு – செலவுத் திட்டத்துக்கு அனுமதியைப் பெற்றுக் கொள்ளும்போதும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பிலும் நாடாளுமன்றத்தில் இரு தரப்பினரும் கேட்டுக்கொண்டதாக சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதனைச் செயற்படுத்துவது தொடர்பில் நாடாளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் ஆகியவற்றை கலப்பு முறையில் நடத்துவது தொடர்பான யோசனைகள் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அந்த யோசனையை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்துள்ளார்.

அதற்கிணங்க அமைச்சரவையானது நாடாளுமன்றத்தில் அனைத்து உறுப்பினர்களினதும் கருத்துக்களைப் பெற்றுக்கொண்டு மீண்டும் அறிவிக்குமாறு தெரிவித்திருந்தது.

அனைத்து மக்களினதும் தேர்தல் முறைமையை மாற்றியமைப்பதற்கு நாடாளுமன்றத்திலும் மூன்று விசேட தெரிவுக்குழுக்கள் நியமிக்கப்பட்டு அதன் மூலம் நாடாளுமன்றத்துக்கு விடயங்கள் கோரப்பட்டுள்ளன.

மாகாண சபை தொடர்பான தேர்தல் சட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுத்தபோது அதில் பெருமளவு திருத்தங்கள் உள்ளீடு செய்யப்பட்டு நிறுத்தப்பட்டன. அதனை மீண்டும் கொண்டு வருவது தொடர்பில் தெரிவுக்குழு அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் நாம் பெற்றுக் கொண்ட மக்கள் ஆணை மற்றும் அதனைச் செயற்படுத்த முடியுமா? இல்லையா? என்பது தொடர்பில் பேச்சு நடத்தி ஜனநாயக ரீதியில் கருத்துக்களை ஆராய்ந்து அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்காக அரசியல் கட்சியின் தலைவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதற்கு ஐக்கிய மக்கள் சக்தி பங்குபற்றுவதில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சந்தேகத்துடன் பார்த்து அரசியல் தீர்மானம் மேற்கொள்ள முடியாது என்பதை நான் எதிர்க்கட்சித் தலைவருக்குக் குறிப்பிட விரும்புகின்றேன்.

இதற்கு முன்னர் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்ட அரசமைப்பின் 20ஆவது திருத்தம் மற்றும் 21ஆவது திருத்தம் ஆகியவற்றிலும் இந்தத் திருத்தங்கள் தொடர்பில் பேசப்பட்டுள்ளன. சந்தேகமின்றி நாம் உண்மைத்தன்மையுடன் இது தொடர்பில் கலந்துரையாடவுள்ளோம்." – என்றார்.



# மாணவர்களின் எதிர்ப்புப் பேரணியின் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம்

பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் ஆரம்பித்த எதிர்ப்பு பேரணி மீது பொலிஸார் நேற்று மாலை கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

பேராதனை பல்கலைக்கழக மாணவர் சங்கம், பல்கலைக்கழகத்திலிருந்து கண்டி நகர் வரை எதிர்ப்புப் பேரணியொன்றை முன்னெடுக்கவிருந்தது.

நிகழ்நிலை காப்புச் சட்டமூலம், கல்வியை தனியார் மயமாக்குதல் உள்ளிட்டவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், பல்கலைக்கழக மாணவர்கள் கொழும்பு – கண்டி பிரதான வீதிக்கு வருகை தந்த சந்தர்ப்பத்தில், பேராதனை விடுதிக்கு அருகில் பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

# தேர்தல் சட்டத்திருத்தம் தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்க விசேட ஆணைக்குழு!

தேர்தல் சட்டத்திருத்தம் தொடர்பில் ஆராய்ந்து தேவையான பரிந்துரைகளை வழங்குவதற்காக முன்னாள் பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் தலைமையில் குழுவொன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

தேர்தல் முறைமையை மாற்றல், ஊடக வழிகாட்டுதல்களை தயாரித்தல், அரசியல் கட்சிகளின் பதிவைக் கட்டுப்படுத்தும் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பான பரிந்துரைகளையும் குறித்த ஆணைக்குழு முன்வைக்க வேண்டும்.

இந்த ஆணைக்குழு, தற்போதுள்ள அனைத்து தேர்தல் விதிமுறைகளையும் ஆய்வு செய்து, திருத்தம் செய்வதற்கான பரிந்துரைகளை வழங்க வேண்டும்.

குறிப்பாக, பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல், தேர்தல் அறிவிக்கப்படும் திகதிக்கும், முடிவுகள் வெளியாகும் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தை குறைத்தல், மின்னணு வாக்குப்பதிவு முறை அறிமுகம், வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் வாக்களிப்பதற்கு ஏதுவான முறைமையை அறிமுகப்படுத்துதல், நபரொருவருக்கு மாகாண சபை மற்றும் பொதுத்தேர்தல்களில் போட்டியிடுவதற்கும், இரண்டு சபைகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் சந்தர்ப்பம் வழங்குதல், அரச துறை அல்லாத ஊழியர்களுக்கும் தபால் மூலம் வாக்களிக்கும் வாய்ப்பை வழங்குதல், விகிதாசார மற்றும் கலப்பு தேர்தல் முறையை அறிமுகப்படுத்துதல், அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் ஊடகங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது தொடர்பிலான வழிகாட்டல்களை தயாரிப்பதற்கு பரிந்துரைகளை முன்வைத்தல், அரசியல் மற்றும் பொது விவகாரங்களில் கட்சி உறுப்பினர்களுக்கான ஒழுக்க நெறிமுறைகளை அறிமுகப்படுத்துதல், அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்கான சட்டங்களை வலுப்படுத்துதல் ஆகியவற்றை கருத்தில் கொண்டு ஆணைக்குழு தனது பரிந்துரைகளை 6 மாதங்களுக்குள் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஆணைக்குழு உறுப்பினர்கள் பற்றிய செய்தி-- 12ஆம் பக்கத்தில்)

# புதுக்கடை நீதிவான் மன்றத்தின் சான்றுப்பொருள்கள் திருட்டுப்போன சம்பவம் குறித்து விசாரணை ஆரம்பம்

கொழும்பு – புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தின் சான்றுப்பொருள்களை வைத்திருக்கும் அறைக்குள் திருடர்கள் நுழைந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த திங்கள் கிழமை ஒருவர் பூட்டை உடைத்து அறையிலிருந்த பொருளொன்றை எடுத்துள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளின் போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அங்குள்ள வழக்கு சான்றுப்பொருள்கள் காணாமல் போயுள்ளனவா என்பதை நீதிமன்றம் இதுவரை பொலிஸாருக்கு அறிவிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில், வாழைத்தோட்டம் பொலிஸாருக்கு நேற்று முன்தினம் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

முதற்கட்ட விசாரணைகளின் போது, சான்றுப்பொருள்கள் அடங்கிய அறைக்குள் பிரவேசித்த நபரின் 02 கைரேகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த அறை முன்னர் கடந்த 6 ஆம் திகதியும் உடைக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மரதன்கடவல விபத்தில் 15 பேருக்குப் படுகாயம்

(ரஸீன் ரஸ்மின்)

அநுராதபுரத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்று நேற்று மரதன்கடவல பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி மரத்தில் மோதியதில் பாடசாலை மாணவர்கள் இருவர் உட்பட 15 பேர் படுகாயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் காயமடைத்தவர்கள் மரதன்கடவல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த விபத்தில் காயமடைந்த பயணிகளை மரதன்கடவல வைத்தியசாலையில் அனுமதிப்பதற்காக பொலிஸாருடன் இணைந்து அந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்களும் செயற்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களில் சிலர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



இந்த விபத்து சம்பவம் தொடர்பில் மரதன்கடவல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


"பிராணசிகிச்சை" பாடவிளக்கமும், செய்முறை பயிற்சியும்

பயிற்சி நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

இடம்:- கலைத்தூது கலாமுற்றம்,
இல: 15, நக்காவீதி, யாழ்ப்பாணம்

காலம்:- 22.10.2023 ஞாயிற்றுக்கிழமை
மாலை 6.00 மணி முதல் 9.00 மணி வரை




நிகழ்வுமுறை

மாலை

6.00 நவராத்திரி வழிபாடும் பாடல்களும்.
6.20 பிராணசக்தி நிகழ்வுரையும், விளக்கவுரையும்.
7.15 அனுபவப் பகிர்வு
7.30 கலை இசை நிகழ்ச்சி
8.25 சான்றிதழ் வழங்கள்
8.30 நன்றியுரை
8.40 சிற்றுண்டி வழங்குதல்
9.00 நிகழ்ச்சி நிறைவு.






AUM REIKI CENTRE JAFFNA
ஓம் ரெய்கி சென்ரர் யாழ்ப்பாணம்
Pranic Healing (Reiki) and Yoga
(Tranining & Counseling)



அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

ரெய்கிமாஸ்டர் ஸ்ரீநந்தகுமார் :763855031, +61415405361
யோகாமாஸ்டர் அச்சுதராஜா :777607026

# தமிழக மீனவர்களை தாக்கும் கடற்கொள்ளையர்கள்: நடவடிக்கை எடுப்பதற்கு தமிழக அரசு தவறி விட்டது!

## - ராமதாஸ் குற்றச்சாட்டு



தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்கொள்ளையர்களின் தாக்குதலைத் தடுக்கவும், அதன் பின்னணியில் இருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் தமிழக அரசு தவறி விட்டது என பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மீனவர்கள் தாக்கப்படும் போது மத்திய அரசுக்கு முதல்வர் எழுதும் வழக்கமான கடிதத்தைத் தாண்டி இந்த சிக்கலில் எந்த நடவடிக்கையும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தனது சமூக வலைத் தளப் பக்கத்தில் ராமதாஸ் வெளியிட்டுள்ள பதிவில்,

நாகை மாவட்டம் வேதாரண்யத்தை அடுத்த வானவன் மகாதேவி கிராமத்தைச் சேர்ந்த 9 மீனவர்கள் கோடியக் கரை அருகில் வங்கக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, அவர்களை இலங்கை கடற்கொள்ளையர்கள் சுற்றி வளைத்து கொடிய ஆயுதங்களால் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலில் 9 மீனவர்கள் காய மடைந்துள்ளனர்.

இரு படகுகள் சேதமடைந்திருக் கின்றன. அவர்களிடமிருந்து 5 லட்சம் ரூபா மதிப்புள்ள மீன்பிடி உப கரணங்களும், பலநூறு கிலோ மீன்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இலங்கை கடல் கொள்ளையர்களின் இந்த தாக்குதல் கடுமையாக கண்டிக்கத் தக்கது.

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்கொள்ளையர்களின் தாக்குதல் அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. குறைந்தது வாரத்துக்கு இரு முறையாவது தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடல் கொள்ளையர்கள் தாக்குதல் நடத்துகின்றனர். ஆனால், அதன் மீது மத்திய, மாநில அரசுகள் எந்த நடவடிக்கையும் எடுக்காதது கண்டிக்கத்தக்கது. நாகை மாவட்ட கடலோரப் பகுதிகளில் தமிழக காவல்துறையின் கடலோரப் பாதுகாப்பு குழு செயல்பட்டு வரும் போதிலும், கடந்த சில மாதங்களாக தொடர்ந்து நடைபெற்று வரும் இலங்கை கடற்கொள்ளையர்களின் தாக்குதல் குறித்து இதுவரை எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை. மாநில அரசுக்கு எந்த அறிக்கையும் தாக்கல் செய்ய வில்லை.

இலங்கை கடல் கொள்ளையர்களால் தமிழக மீனவர்கள் ஒவ்வொருமுறை தாக்கப்படும் போதும், கடற்கொள்ளையர்களின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டு, அடையாளம் தெரியாதவர்கள் தாக்கியுள்ளனர் என வழக்குப் பதிவு செய்வதை மட்டும் தமிழக பொலிஸ் வாடிக்கையாகக் கொண்டிருக்கிறது.

இந்த சிக்கலை மத்திய அரசின் கவனத்துக்கு கொண்டு சென்று, கடற்கொள்ளையர்களின் தாக்குதலைத் தடுக்கவும், அதன் பின்னணியில் இருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் தமிழக அரசு தவறி விட்டது. மீனவர்கள் தாக்கப்படும் போது மத்திய அரசுக்கு முதல்வர் எழுதும் வழக்கமான கடிதத்தைத் தாண்டி இந்த சிக்கலில் எந்த நடவடிக்கையும் இல்லை.

வங்கக் கடலில் அட்டகாசம் செய்யும் இலங்கை கடற்கொள்ளையர்கள் தமிழக மீனவர்களைத் தாக்கி பொருட்களை கொள்ளையடிப்பதற்காக இலங்கை அரசால் உருவாக்கப்பட்ட கூலிப்படையினர் ஆவர்.

அதில் சிங் களக் கடற்படையினரும் அங்கம் வகிக்கின்றனர் என கூறப் படுகிறது. தொடர் தாக்குதல்களை நடத்துவதன் மூலம் தமிழக மீனவர்களை வங்கக் கடலில் மீன் பிடிக்கச் செய்யாமல் தடுப்பது தான் இலங்கை அரசின் நோக்கம் ஆகும்.

இந்திய அரசு நினைத்தால் இலங்கை கடற்கொள்ளையர்களின் அட்டகாசத்துக்கு ஒரு சில மணி நேரங்களில் முற்றுப் புள்ளிவைக்க முடியும்.

இலங்கை கடற்கொள்ளையர்களின் அட்டகாசத்தை இனியும் வேடிக்கை பார்க்காமல், அவர்கள் மீது சர்வதேச கடல்பாதுகாப்பு சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்க மத்திய அரசு முன்வர வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் அடிப்படையில் இலங்கை கடற்கொள்ளையர்களை இண்டர்போல் எனப்படும் சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் கைது செய்து தண்டிக்க தமிழக அரசும், தமிழக பொலிஸாரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

---

# இஸ்ரேலில் இருந்து இதுவரை 147 பேர் தமிழகம் திரும்பினார்



இஸ்ரேலில் இருந்து இதுவரை 121 பேர் தமிழக அரசின் செலவிலும், 26 தமிழர்கள் தங்கள் சொந்த செலவிலும் என மொத்தமாக 147 பேர் தமிழகம் வந்தடைந்துள்ளனர் என்று தமிழக அரசின் அயலகத் தமிழர் நலத் துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், இஸ்ரேல் – பாலஸ்தீனம் நாடுகளுக்கு இடையேயான போர் தற்போது தீவிர மடைந்துள்ளது.

இந்த நிலையில், தமிழக முதல்வரின் ஆணைக்கிணங்க தமிழக அரசின் சார்பில் அறிவிக்கப்பட்ட உதவி எண்கள் மூலம் அங்கு சிக்கித் தவித்த 158 தமிழர்களின் தகவல்கள் அறியப்பட்டது. இவர்களுடன் தமிழக அரசின் அயலகத் தமிழர் நலத்துறையின் மூலம் தொடர்பு ஏற்படுத்தப்பட்டு, அவர்களின் தேவைகள் கண்டறியபட்டது. அதன் அடிப்படையில், இதுவரை நான்கு கட்டங்களாக புது டெல்லி வந்த 98 தமிழர்கள் அவர்களது இல்லம் வரை, தமிழக அரசின் சார்பில் அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு இஸ்ரேலில் இருந்து 'ஒபரேஷன் அஜய்' மூலம் புதுடில்லி வந்தடைந்த 23 தமிழர்கள் தமிழக அரசினால் வரவேற்கப்பட்டனர். இஸ்ரேலில் இருந்து 121 பேர் தமிழக அரசின் செலவிலும், 26 தமிழர்கள் தங்கள் சொந்த செலவிலும் தமிழகம் வந்தடைந்துள்ளனர் என் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# இஸ்ரேலுக்கு முழு உதவி அளிக்கப்படும்!

## நெத்தனியாகுடனான ஊடக சந்திப்பில் ஜோ பைடன் உறுதி



இஸ்ரேலுக்கான உதவிகள் அனைத்தையும் அமெரிக்கா தொடர்ந்தும் வழங்கும் என அந்த நாட்டு ஜனாதிபதி ஜோ பைடன் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நேற்று இஸ்ரேலுக்கு விஜயம் மேற்கொண்டார். இந்த நிலையில் அங்கு இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் – இஸ்ரேல் பிரதமர் நெத்தனியாகு ஆகியோர் கூட்டாக ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்தனர். ஐ.எஸ் அமைப்பின் பாதையை அப்படியே ஹமாஸ் அமைப்பினர் பின்பற்றி வருகின்றனர். ஹமாஸ் அமைப்பினர் தற்போதைய நாஜிப்படை களாக மாறி இருக்கின்றனர்.

அவர்கள் இதுவரை 1400 இஸ்ரேலியர்களை கொன்றுள்ளனர்.

இது கவலையளிக்கும் விடயமாகும். இவ்வாறானதொரு சூழ்நிலையில் அமெரிக்காவின் ஒத்துழைப்பிற்கும் உதவிகளுக்கும் நன்றி என இஸ்ரேல் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதன் போது கருத்து தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி,

இஸ்ரேலுக்கு தேவையான உதவிகளை அமெரிக்கா தொடர்ந்தும் வழங்கும். 75 ஆண்டுகளுக்கு முன், இஸ்ரேலின் நிறுவனர்கள், சுதந்திரம், நீதி மற்றும் அமைதி அடிப்படையில் ஒரே நாடாக இஸ்ரேலை அறிவித்தனர்.

இந்த சுதந்திரம் பாதுகாக்கப்படும் வகையில் இஸ்ரேலுடன், இன்றும், நாளையும் மற்றும் எப்போதும் அமெரிக்கா துணையாக நிற்கும்.

அதற்கு நாங்கள் உறுதி கூறுகிறோம். ஹமாஸ் அமைப்பு, பாலஸ்தீன மக்களின் பிரதிநிதியாக இல்லை. இவ்வாறானதொரு சூழ்நிலை யில் காசா பகுதி மக்களுக்கு உதவி தேவையாக உள்ளது.

மேலும், காசா வைத்தியசாலை மீது நடந்த தாக்குதல் குறித்து அமெரிக்க தேசிய பாதுகாப்பு குழு விசாரணையை மேற்கொள்ளும் என்று தெரிவித்துள்ளார்.

# எகிப்திலிருந்து காசாவுக்கு வரும் உதவிகளை தடுக்க மாட்டோம் என இஸ்ரேல் அறிவிப்பு



எகிப்திலிருந்து காசாவுக்கு வரும் மனிதாபிமான பொருட்களை இஸ்ரேல் தடுக்காது என இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்த முடிவை இஸ்ரேல் எடுத்துள்ளது.

நேற்று இஸ்ரேல் சென்ற அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஹமாஸ்’க்கு எதிரான போரில் இஸ்ரேலுக்கு ஆதரவு வழங்கப்படும் என்று தெரிவித்தார். பின்னர், காசாவுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவும் வகையில் செயல்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.

அதன்படி, எகிப்திலிருந்து வரும் மனிதாபிமான பொருள்களை இஸ்ரேல் தடுக்காது.

அதேநேரம், எங்கள் பிணைக் கைதிகள் திருப்பி அனுப்பப்படாத வரையில், இஸ்ரேல் எல்லையில் இருந்து காசாவிற்கு மனிதாபிமான பொருள்களை இஸ்ரேல் அனுமதிக்காது. ஆனால் எகிப்தில் இருந்து வரும் உதவிகளை தடுக்காது என்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் தெரிவித்துள்ளது.



# நியூஸிலாந்துக்கு நான்காவது வெற்றி ஆப்கானிஸ்தானை இலகுவாக சாய்த்தது

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக நேற்று நடைபெற்ற லீக் ஆட்டமொன்றில் நியூஸிலாந்து அணி இலகுவெற்றிபெற்று, நான்காவது வெற்றியைப் பதிவு செய்தது.

13ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று நடைப்பெற்ற லீக் ஆட்டம் ஒன்றில் நியூஸிலாந்து – ஆப்கானிஸ்தான் அணிகள் சென்னையில் மோதின.

இந்த ஆட்டத்துக்கான நாணயச் சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் அணி, முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 288 ஓட்டங்களைச் சேர்த்தது.

நியூஸிலாந்து அணி சார்பாக துடுப்பாட்டத்தில் யங் (54), டொம் லதம் (68), கிளென் பிலிப்ஸ் (71) ஆகியோர் சிறப்பாக ஆடினர்.

பின்னர் 289 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிநங்கிய ஆப்கானிஸ்தான் அணயின் தொடக்க வீரர்களான குர்பாஸ் (11), இப்ராகிம் ஜட்ரான் (14 ) ஆகியோர் விரைவாக ஆட்டமிழந்தனர்.

பின்னர் களமிறங்கிய ரஹ்மத் ஷா (36), ஹஸ்மத்துல்லா ஷாகிடி (8), ஓமர்சாய் (27), நபி (7), ரஷீத் கான் (8), முஜீப் (4), நவீன் (0) ஆகியோரும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இறுதியில் ஆப்கானிஸ்தான் அணி 34.4 ஓவர்களில் 139 ஓட்டங்களைச் சேர்த்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இதன்மூலம் நியூஸிலாந்து அணி 149 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

நியூஸிலாந்து அணி சார்பாக பந்து வீச்சில் சான்ட்னெர், பெர்குசன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், போல்ட் 2 விக்கெட்டுகளையும், ஹென்றி, ரவீந்திரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக நியூஸிலாந்தின் கிளென் பிலிப்ஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் நியூஸிலாந்து அணி புள்ளிப்பட்டியலில் 8 புள்ளிகளுடன் முதலிடத்துக்கு முன்னேறியது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் இந்தியா – பங்களாதேஷ் அணிகள் மோதவுள்ளன.





## உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை

| | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ | பு | ஓ.ச |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | நியூஸிலாந்து | 4 | 4 | 0 | 0 | 0 | 8 | 1.923 |
| 02 | இந்தியா | 3 | 3 | 0 | 0 | 0 | 6 | 1.821 |
| 03 | தென்னாபிரிக்கா | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | 1.385 |
| 04 | பாகிஸ்தான் | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | 0.137 |
| 05 | இங்கிலாந்து | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.084 |
| 06 | பங்களாதேஷ் | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.699 |
| 07 | அவுஸ்திரேலியா | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.734 |
| 08 | நெதர்லாந்து | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.993 |
| 09 | ஆப்கானிஸ்தான் | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -1.250 |
| 10 | இலங்கை | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -1.532 |

குறிப்பு: போ–போட்டி, வெ–வெற்றி, தோ–தோல்வி, மு.அ.–முடிவு அற்றது, பு–புள்ளி, ஓ.ச.–ஓட்ட சராசரி

# வடக்கில் 9543 ஏக்கர் காணி அரச படையினரால் அபகரிப்பு

## விடுவிக்குமாறு சிறீதரன் எம்.பி.கோரிக்கை



வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ள அரச மற்றும் தனியார் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் முப்படைகள், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பில், பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாகத் திரட்ட முடிந்த தகவல்களைக் கொண்டு, தன்னால் தயாரிக்கப் பட்ட விவரண அறிக்கையை சபாபீடத்திற்கு சமர்ப்பித்து நேற்றையதினம் நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 4378.8 ஏக்கரும், யாழ்ப்பாண மாவட்டத்தில் 2433.79 ஏக்கரும், முல்லைத் தீவு மாவட்டத்தில் 1578.27 ஏக்கரும், வவுனியா மாவட்டத் தில் 1021.55 ஏக்கரும், மன்னார் மாவட்டத்தில் 130.77 ஏக்கருமாக வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்க ளிலும் 9543.18 ஏக்கர் காணிகள் படையினரால் அப கரிக்கப்பட்டுள்ளன என அவரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது.

# தேர்தல் மறுசீரமைப்பு ஆணைக்குழுவில் சலீம், சுந்தரம் அருமைநாயகம் நியமனம்





(அஸ்ஹர் ஆதம், நூருல் ஹுதா உமர்)

தேர்தல் முறை மறுசீரமைப்பு தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக ஓய்வுபெற்ற சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரிகளான சாய்ந்தமருதைச்சேர்ந்த ஏ.எல்.எம்.சலீமும் சுந்தரம் அருமைநாயகமும் ஜனாதி பதியின் செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தேர்தல்கள் மறுசீரமைப்பு சம்பந்தமான ஆலோசனை களைப் பெறுவதற்காக மேற்படி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரி அல்ஹாஜ் ஏ.எல். எம். சலீம் கடந்த காலங்களில் இலங்கை பொது சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவராகவும், அமைச்சுக்களின் மேலதிக செயலாளராகவும் பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை இந்த ஆணைக்குழுவின் மற்றுமொரு உறுப்பினராக ஓய்வுபெற்ற சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகா ரியான சுந்தரம் அருமைநாயகமும் நியமிக்கப்பட்டுள்ளார்.

09 பேர் கொண்ட இந்த ஆணைக்குழுவில் இவ்விரு வரும் சிறுபான்மை இனங்களைச்சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆணைக்குழுவில் மேலும் ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் சனாதிபதி சட்டத்தரணி கௌரவ வெவகே பிரியசாத் ஜெராட் டெப், சேனாநாயக்க அலிசெண்ட்ரலாகே, சனாதி பதி சட்டத்தரணி நலின் ஜயந்த அபேசேகர, ரஜித நவீன் கிரிஸ்டோபர் சேனாரத்ன பெரேரா, சாகரிகா தெல்கொட, எஸ்தர் சிறியானி நிமல்கா பிரணாந்து, விதாரணகே தீபானி சமந்த ரொட்ரிகோ ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ள னர்.

# ஆசியக் கிண்ண சக்கர நாற்காலி துடுப்பாட்டத்தில் பங்கேற்ற வீரருக்கு தம்பலகாமத்தில் பாராட்டு

(அ.அஸ்வர்)

ஆசியக் கிண்ண சக்கர நாற்காலி மென்பந்துக் கிரிக்கெட் தொடரில் பங் கேற்ற இலங்கை அணியில் இடம் பிடித்திருந்த தம்பலகாமத்தைச் சேர்ந்த பிரியந்த குமாரவுக்கு பாராட்டுத் தெரி விக்கப்பட்டுள்ளது.

ஆசியாக் கிண்ண சக்கர நாற்கா–லி மென்பந்து சுற்றுப்போட்டி நேபாளத் தின் காத்மண்டு நகரில் அண்மையில் நடைபெற்றது.

இதில் பங்கேற்ற இலங்கை அணி யில் திருகோணமலை தம்பலகாமம் கல்மெடியாவ தெற்கு கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் மாற்றுத் திறனாளி யான டபிள்யூ.பிரியந்தகுமாரும் பங் கேற்றிருந்தார்.

ஒக்டோபர் 4 முதல் 9 வரை நேபாளத் தின் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற சக்கரநாற்காலி போட்டியில் இலங்கை அணி இரண்டாம் இடத்தைப் பெற்றது.

இந்நிலையில், இலங்கை அணி யில் இடம்பிடித்திருந்த மாற்றுத் திற



னாளியான பிரியந்தவுக்கு தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி பிரதேச செயலகத்தில் வைத்து நேற்றுமுன் தினம் (17) பாராட்டுத் தெரிவித்தார்.

அத்துடன், அவருக்கு நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.

# அரசின் இராணுவம். பொலிஸ், புலனாய்வுத்துறை வியாபாரிகளை மிரட்டுகின்றன என்கிறார் செல்வம்

## இது கடைசி ஹர்த்தால் என்பதால் ஆதரவு தரக் கோருகின்றார்

இராணுவ மற்றும் பொலிஸ் புலனாய்வுத் துறையினர் வியாபாரிகளை மிரட்டுகின்றனர் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது ஒரு கடைசியான ஹர்த்தால். அதனால் அனைவரும் ஆதரவு தர வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு நீதிபதிக்கு நீதி கேட்டு இடம்பெறவுள்ள ஹர்த்தால் தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

20ஆம் திகதி ஹர்த்தாலை அனுஷ்டிக்குமாறு கோருகின்றோம். எங்களுடைய மக்கள் போராட்டத்தின் ஊடாக முன்னுக்கு வந்தவர்கள். போராட்டத்தின் குணாதிசயங்களைக் கொண்டவர்கள். இருந்தாலும் நீதித்துறை, நில அபகரிப்பு, புத்த கோவில்களுடைய ஆக்கிரமிப்பு என்பன வடக்கு – கிழக்கில்



மிக மோசமாக நடந்து வருகின்றன. எங்களது மக்களின் பூர்வீகம் மற்றும் அவர்களின் நிலங்களை அபகரிப்பதன் ஊடாக எங்களுடைய மக்களின் வரலாற்றை சிதைக்கும் செயற்பாட்டை தடுத்து நிறுத்தும் வகையில் இந்த ஹர்த்தால் போராட்டத்தை நடத்தவுள்ளோம்.

எமது மக்கள் போராட்டத்தின் ஊடாக வந்தவர்கள் ஆகையால் இதற்கு ஆதரவு தருவார்கள் என நம்புகின்றோம். இருந்தாலும் சில சங்கடங்கள் இருக்கின்றன. அன்றாடம் உழைக்கின்ற மக்கள் தமது அன்றைய தேவைக்கு என்ன செய்வார்கள் என்ற கேள்வி எழுகிறது.

தற்போது புதிதாக அடாவடித் தனமான, ஜனநாயக விரோதமான செயற்பாடு நடக்கிறது. இராணுவ மற்றும் பொலிஸ் புலனாய்வுத் துறையினர் வர்த்தக நிலையங்களை நடத்துவோர், சிறுதொழில் செய்வோர், மரக்கறி வியாபாரம் செய்வோர் என அவர்களை மிரட்டி அவர்களை ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்க வேண்டாம் எனக் கூறி வருகிறார்கள். அதற்கு எமது கண்டனத்தைத் தெரிவிக்கின்றோம்.

அனைத்து தமிழ் பேசும் மக்களும் இதற்கு ஆதரவு தருவார்கள். அரசாங்கம் கூடுதலான திணைக்களங்கள் மற்றும் பிக்குகளை வைத்து எமது மக்களை அடக்கி ஒடுக்கும் செயற்பாட்டை முன்னெடுக்கிறது. தொடர்ந்தும் ஹர்த்தாலை நடத்த முடியாது. இது ஒரு கடைசியான ஹர்த்தால். அதனால் அனைவரும் ஆதரவு தர வேண்டும் எனத் தெரிவித்தார்.



# மகாவலி நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 46 வீதம் உயர்வு!

மழையுடனான வானிலையினால் மகாவலி நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 46 வீதம் வரை உயர்வடைந்துள்ளது.

கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 77 வீதம் வரையிலும், விக்டோரியா நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 44 வீதம் வரையிலும் உயர்வடைந்துள்ளன என இலங்கை மகாவலி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

பெரும்போக பயிர்ச்செய்கைக்காக நீரை விடுவிக்கும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை எதிர்வரும் முதலாம் திகதி நிறைவடையவுள்ளது என இலங்கை மகாவலி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

உரிய கால அட்டவணைக்கு அமைவாக பயிர்ச்செய்கையை ஆரம்பிக்குமாறு அதிகாரசபை, விவசாயிகளைக் கேட்டுக்கொண்டுள்ளது.

இதனிடையே, நாட்டின் பல பிரதேசங்களில் பலத்த மழை பெய்யலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, ஊவா, மத்திய, தென் மாகாணங்களில் 100 மில்லிமீட்டருக்கும் அதிக மழை எதிர்பார்க்கப்படுகிறது என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

வடக்கு, வட மத்திய, கிழக்கு மாகாணங்களில் மின்னல் தாக்கம் ஏற்படலாம் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், பதுளை, காலி, ஹம்பாந்தோட்டை, கண்டி, கேகாலை, மாத்தறை, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி ஆகிய 9 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதியின் கையையும் மீறி கிழக்கில் ஆக்கிரமிப்பு அடாவடி

## நீதியரசர் விக்கினேஸ்வரன் விசனம்




- எஸ்.நிதர்ஷன்-

ஜனாதிபதி எதைச் சொன்னாலும் அவை எவையும் கிழக்கில் நடக்காது என்ற நிலைமைதான் காணப்படுகிறது. அங்கு திட்டமிட்ட செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகிற போது ஜனாதிபதி எதனைக் கூறினாலும் அதைக் கேட்காமல்தான் செயற்படுகிறார்கள்.

– இப்படி விசனத்துடன் கூறியிருக்கின்றார் நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன்.

நாளைய தினத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள ஹர்த்தால் தொடர்பில் தமிழ்த் தேசிய கட்சிகள் யாழ் ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பொன்றை நேற்று நடாத்தியிருந்தன.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி. விக்கினேஸ்வரன் தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் மக்களின் இன்றைய நிலைமையை அனைத்துத் தரப்பினர்களுக்கும் உணர்த்தும் வகையில் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள நாம் அனைவருமாக இணைந்து ஹர்த்தால் செய்வதற்குத் தீர்மானித்து உள்ளோம்.

மட்டக்களப்பிற்கு சென்று கட்சி உறுப்பின்ர்களைச் சந்தித்து கலந்துரையாடிய பின்னர் மயிலத்தமடுவில் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை சந்தித்தும் கலந்துரையாடியிருந்தேன். அதன் போது அங்குள்ள பல்வேறு விடயங்களைத் தெரிந்து கொண்டிருந்தேன்.

அந்த மக்களின் கால்நடைகளை இல்லாமல் செய்து, அந்த இடம் முழுவதையும் ஆக்கிரமித்து, சிங்கள மயமாக்குகின்ற வகையில் தொடர்ந்தும் பல்வேறு வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக தமிழ் மக்களுக்கு எதிராக மிக மிக மோசமான செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபாய நிலைமையில் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த மாவட்டத்திற்கு சென்ற போதும் அவர்களைச் சந்திக்காமலேயே சென்றிருக்கின்றார்.

இவ்வாறான நிலைமையில் சில தினங்களிற்கு முன்னர் அங்கு ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகளை மீள வழங்க வேண்டுமென்று அறிவித்திருக்கின்றார்.

ஆனால் ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு வந்த பின்னர் கூட அங்கிருந்த தமிழ் மக்களின் வாடிகள் எரிக்கப்பட்டமை மாத்திரமல்லாமல், அங்கு தமிழ் மக்கள் போக முடியாதவாறு அச்சுறுத்தல் விடுத்து, அவர்களை விரட்டி அனுப்புகின்ற நிலைதான் உள்ளது.

ஆக, ஜனாதிபதி எதைச் சொன்னாலும் அங்கு எதுவும் நடக்காது என்ற நிலைமைதான் காணப்படுகிறது. அங்கு திட்டமிட்ட செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகிற போது ஜனாதிபதி எதனைக் கூறினாலும் அதைக் கேட்காமல்தான் செயற்படுகிறார்கள்.

குறிப்பாக ஆக்கிரமிப்பு காணிகளை விடுவிக்க வேண்டுமென்று ஜனாதிபதி சொன்ன பின்னரும் அங்கு முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் பௌத்த விகாரை வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி விடுவிக்க வேண்டுமென்று அறிவித்த பின்னரும் கூட புத்தர் சிலை வைப்பது மட்டுமல்ல, அந்த இடம் தங்களுடையது என்றும், அங்கு வேறு யாரும் வரக் கூடாது என அச்சுறுத்துவதுமான நடவடிக்கைகள் தொடர்வது மிகவும் பாரதூரமானது.

இவ்வாறான நிலைமைகள் தொடர்வது தமிழ் மக்களின் இருப்பு மட்டுமல்லாமல் எதிர்காலமே கேள்விக் குறியாக்கப்படும் நிலைமை ஆபத்தானது.

இவ்வாறு தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் ஆக்கிரமிப்புக்கள், அபகரிப்புக்கள் மட்டுமல்லாது அடக்குமுறைகள், ஒடுக்குமுறைகள் என அனைத்தையும் சுட்டிக்காட்டி இதனைத் தடுத்து நிறுத்த வலியுறுத்தியும், நீதி கோரியும் தமிழ் மக்களின் நிலையை அனைவருக்கும் தெரியப்படுத்தும் வகையில் ஹர்த்தலை முன்னெடுக்கிறோம்.

தமிழ் மக்களின் நிலையை வெளிப்படுத்தி பல தரப்பினரும் இணைந்து முன்னெடுக்கிற இந்த ஹர்த்தாலை கூட தமிழர்களாக இருந்து கொண்டு பிள்ளையான் போன்றவர்கள் குழப்புகின்ற வகையில் செயற்படுகின்றனர்.

மட்டக்களப்பில் பிள்ளையானின் ஆதரவு வர்த்தக நிலையங்களை கட்டாயம் திறக்க வேண்டுமென அறிவிக்கின்ற நிலை உள்ளது. குறிப்பாக தமிழ மக்கள் ஒருமித்து ஐக்கியமாக செயற்படுகிற போது அதற்கு மாறாக அரச தரப்பிலுள்ள தமிழ்க் கட்சிகளே குழப்புவது தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கு மிகவும் ஆபத்தானது.

அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகிற பிள்ளையான் போன்றவர்கள் தமிழ் மக்களின் எதிர்காலத்திற்காக தமிழ்த் தரப்பாக ஒருமித்து நீதி கோருகிற போது, அதனைக் கொச்சைப்படுத்துவதோ குழப்புவதோ வருங்காலத்தில் எமது மக்களுக்கே கடும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதைச் சுட்டிக் காட்டுவதுடன் இத்தகைய செயற்பீடுகளை வன்மையாக கண்டிக்கிறேன்.

அதேநேரம் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகிற வியாழேந்திரன் தரப்பினர் தமிழ் மக்களின் கோரிக்கைக்கு அமைய வர்த்தக நிலையங்களை பூட்டி ஹர்த்தாலை வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்று கேட்டுள்ளனர்.

எனவே அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு எதிராகவும் நீதி கோரியும் முன்னெடுக்கப்படுகிற ஹர்த்தாலுக்கு பேதங்கள் இல்லாமல் அனைவரும் ஆதரவை வழங்க வேண்டும். குறிப்பாக ஒட்டுமொத்த தமிழ், முஸ்லிம் மக்களும் தங்களது முழுமையான ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் தமிழ் மக்களின் இன்றைய நிலைமையை பார்க்கின்ற போது மிக மிக ஆபத்தானதாகவே இருக்கிறது. குறிப்பாக நாங்கள் கல்வி பயிலுகிற காலத்தில் பறங்கியர் என்றொரு இனம் இருந்தது. அவர்களில் பலர் எங்களது நண்பர்களாகவும் இருந்தனர். ஆனால் இப்ப அவர்கள் ஏவரும் இல்லை.

அதே போல் தான் எமது நிலைமையும் ஏற்படும் ஆபத்து உள்ளது. எமது மக்களுக்கு எதிராக தொடரும் ஆக்கிரமிப்பும் அபகரிப்பும் அடக்கி ஒடுக்குகின்ற செயற்பாடுகளும் காரணமாக இந்த நாட்டில் வாழ முடியாது எனத் தெரிவித்து இப்போது எமது மக்களும் வெளிநாடு செல்கின்றனர்.

தமிழ் மக்கள் மீது அரசாங்கத்தின் இத்தகைய நடவடிக்கைகள் தொடர்ந்தால் பலரும் வெளிநாடுகளுக்கே சென்று விடுவார்கள். ஆக மொத்தத்தில் அரசு திட்டமிட்ட வகையில் தன்னுடைய நடவடிக்கைகளைச் செய்தால் இப்படி தமிழ் மக்கள் அனைவரும் வெளிநாடுகளுக்கு சென்றால் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் என்று சொல்லுகிற நிலைமை இல்லாமல் போய்விடும் ஆபத்து உள்ளது. – என்றார்.



# இந்தியப் போர்க்கப்பல் ஐராவத் கொழும்புத் துறைமுகம் வந்தது

இந்திய கடற்படைக்கு சொந்தமான “ஐ.என்.எஸ். ஐராவத” போர்க்கப்பல் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று புதன்கிழமை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. இலங்கை கடற்படையினரால் இந்தக் கப்பல் சம்பிரதாயபூர்வமாக வரவேற்கப்பட்டது.

ஐராவத் கப்பல் கப்டன் ரிந்து பாபு மற்றும் மேற்கு கடற்படை கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் சமன் பெரேராவுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பும் நேற்று மேற்கு கடற்படை கட்டளைத் தலைமையகத்தில் நடைபெற்றது.

மேலும், “ஐ.என்.எஸ். ஐராவத்“ என்ற கப்பலானது, நாட்டில் நங்கூரமிடப்பட்டிருக்கும் காலப்பகுதியில் கூட்டுப் பயிற்சியில் ஈடுபடவுள்ளது. பயிற்சிகள் நிறைவடைந்த பின்னர் நாளை வெள்ளிக்கிழமை கப்பல் மீண்டும் இந்தியா நோக்கி பயணமாகவுள்ளது.




# காசா மோதல் குறித்து நாளை நாடாளுமன்றத்தில் விவாதம்!





காசா மோதல் தொடர்பான விவாதம் இலங்கை நாடாளுமன்றத்தில் நாளை வெள்ளிக்கிழமை 20 ஆம் திகதி நடைபெறும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று அறிவித்தார்.

சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு பதிலளிக்கும்போது, இந்த விடயம் தொடர்பான இறுதித் தீர்மானத்தை கட்சித் தலைவர்கள் மேற்கொள்வர் என சபாநாயகர் தெரிவித்தார்

அத்துரலியே ரத்தின தேரர, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில ஆகியோர் இந்த விடயம் தொடர்பில் சபையில் விவாதம் நடத்தப்பட வேண்டும் எனவும், இதன் காரணமாக இலங்கைக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து சபைக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நாட்டு மக்களை அடக்கி, ஒடுக்க அரசாங்கம் காட்டுச் சட்டங்களைக் கொண்டு வருகிறது!

## நாடாளுமன்றில் முதல் உரையிலேயே அலிசாகிர் மௌலானா சாட்டை



மக்களை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கும் நோக்கில் அரசாங்கம் காட்டுச் சட்டங்களை நாடாளுமன்றில் நிறைவேற்ற முற்படுவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டில் மக்களின் உரிமைகளும், பேச்சு சுதந்திரமும் கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் ஊடாக மக்களின் அடிப்படை உரிமைகளை இரும்புக்கரம் கொண்டு அடக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நிகழ்நிலை காப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாத ஒழிப்புச் சட்டம் என்பன மக்களை அடக்குமுறைக்கு உட்படுத்தும் நோக்கிலேயே கொண்டுவரப்படுகின்றன.

பல்லின மக்கள் வாழும் இலங்கை போன்ற நாடுகளுக்கு இத்தகைய காட்டுச் சட்டங்கள் பொருத்தமற்றவையாகும்.

ஜனநாயகத்தையும் மக்களின் அடிப்படை உரிமைகளையும் குழிதோண்டிப் புதைக்கும் நோக்கிலேயே இவ்வாறான சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன.

நாட்டினதும் மக்களினதும் சுதந்திரம் மற்றும் உரிமைகளை சிந்திக்க வேண்டிய இந்த உயரிய சபை இத்தகைய சட்டங்களுக்கு அனுமதியளிக்கக் கூடாது.

பல நாடுகளும் சர்வதேச சிவில் அமைப்புகளும் இந்த சட்டங்களுக்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளமையை வரவேற்கிறோம்- என்றார்.

முன்னாள் அமைச்சர் நஸீர் அஹமட்டை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இருந்து நீக்கும் கட்சியின் தீர்மானம் செல்லுப்படியாகுமென உயர் நீதிமன்றத்தின் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் அவரது நாடாளுமன்றப் பதவி பறிபோனது.

அவருக்கு பதிலாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினராக அலிசார் மௌலான தேர்வாகியமையுடன் நேற்றுமுன்தினம் அவர் எம்.பியாக பதவியேற்றுக் கொண்டார் என்பது தெரிந்ததே.

# நிகழ்நிலை காப்பு சட்டமூலத்திற்கு எதிராக 45 மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல்

நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்திற்கு எதிராக மேலும் 11 மனுக்கள் உயர் நீதிமன்றத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளன என சபாநாயகர் நேற்று நாடாளுமன்றத்திற்கு அறிவித்தார்.

அதற்கமைய, நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்திற்கு எதிராக இதுவரை 45 மனுக்கள் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தில் சில திருத்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது என சட்டமா அதிபர் நேற்று உயர் நீதிமன்றத்திற்கு அறியப்படுத்தியுள்ளார்.

சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் இணையவழி பாதுகாப்புச் சட்டமூலம் தொடர்பான திருத்தங்கள் நாடாளுமன்ற குழுநிலை கூட்டத்தின் போது முன்வைக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையின் போது இந்த அறிவிப்பு வெளியானது.



# ஆறு குழந்தைகளில் ஒன்று உயிரிழப்பு!



கொழும்பு - காசல் வீதி வைத்தியசாலையில் பிறந்த ஆறு குழந்தைகளில் ஓர் ஆண் குழந்தை இன்று காலை உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குழந்தையின் நுரையீரலில் இரத்தம் பாய்ந்ததால் மரணம் ஏற்பட்டுள்ளது.

குறித்தகுழந்தைபொரளைரிட்ஜ்வேசிறுவர்வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# இன்றைய ராசி பலன்கள் - 19.10.2023




உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். அமைதியுடனும் பொறுமை யுடனும் இருக்க வேண்டும். எதிர்காலத் திற்கு திட்டமிடுங்கள்.

பணியில் அதிகப்படியான சுமைகள் காணப்படும். உங்கள் பணிகளை முறையாக முடிக்க சில சௌகரியங்களை இழக்க நேரும்.

பணியிடத்தில் காணப்படும் பதட்டத்தை உங்கள் துணையிடம் வெளிபடுத்து வீர்கள்.இதனால் இருவரி டையே வாக்குவாதம் ஏற்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும். தேவை யற்ற செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

தூக்கமின்மை காரணமாக முதுகு வலி ஏற்பட்டு அதனால் கவலை உண்டாகலாம்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி அடை வீர்கள். உங்களிடம் தன்னம்பிக்கை நிறைந்து காணப்படும். உங்கள் பணி களை செவ்வனே ஆற்றுவீர்கள்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். உங்களுள் இருக்கும் திறமை காரணமாக நீங்கள் திறம்பட செயலாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் உறவில் ஒற்றுமை வலுப் படும்.

பண வரவு அதிகமாக காணப்படும். எதிர்பாராத வரவு ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் காணப்படாது. கண்டிப்பான உணவு முறை மற்றும் ஒழுக்கம் உங்கள் ஆரோக்கியத்தை நன்கு பராமரிக்க உதவும்.




இன்று உங்களிடம் நம்பிக்கைப் போக்கு காணப்படும். உங்கள் முயற்சி மூலம் கிடைக்கும் வெற்றி உங்கள் மன உறுதியை அதிகரிக்கும்.

நீங்கள் பணிகளை எளிதாக முடிப்பீர் கள். புதிய வாய்ப்புகள் மூலம் உங்கள் திறமையை நீங்கள் உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். சேமிப்பு மூலம் நிதிநிலைமை உயரும்.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். என்றாலும் எண்ணெய் உணவுகள் காரணமாக தோல் பிரச்சினைகள் காணப்படும்.




இன்று பாதுகாப்பின்மை உணர்வு உங்களிடம் காணப்படும். இருப்ப தைக் கொண்டு மகிழ்ச்சி அடையுங்கள். இதனால் திருப்தி நிலவும்.

பணியிடத்தில் அமைதியற்ற சூழல் காணப்படும். சக பணியாளர்களுடனான உறவில் சில சிக்கல்கள் இருக்கும்.

குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணை யுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இதனை தவிர்ப்பது நல்லது.

இன்று தேவையற்ற செலவுகள் மற்றும் அதனைக் கையாள்வதில் கடினமான சூழல் காணப்படும். இழப்பைத் தவிர்க்க முறையாக திட்டமிட வேண்டும்.

தலைவலி போன்ற சிறு உபாதைகள் காணப்படும். அதிக பொறுப்புகள் காரணமாக தேவையற்ற மன உளைச்சல் காணப்படும்.




இன்று சில சிக்கல்கள் காணப்படும் என்பதால் எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். வாக்கு வாதம் மற்றும் வதந்திகளில் ஈடுபட வேண் டாம்.

பணியிடச் சூழல் சிறிது கடினமாக காணப்படும். கூடுதல் பொறுப்புகள் காணப்படும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண் பிப்பீர்கள். உறவு நல்லுறவாக இருக்கவும் உறவில் மகிழ்ச்சி பராமரிக்கவும் இதனை தவிர்த்தல் நல்லது.

இன்று பண இழப்பு ஏற்படும். நிதி சம்பந்தமான முக்கியமான முடிவுகளை இன்று தவிர்ப்பது சிறந் தது.

தேக ஆரோக்கியம் அவ்வளவு சிறப்பாக இருக் காது. யோகா மற்றும் தியானம் மேற்கொள்வது சிறந் தது.




இன்று இலக்குகளை அடைவ தற்கு உகந்த நாள். இன்று எதிர்பாராத நன்மைகள் நேரலாம்.

நீங்கள் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை விரைவாக முடிப்பீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.

உங்கள் மனதில் பொங்கும் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் இனிமையாகப் பேசுவீர்கள்.

இன்று நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக் கும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர் கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக காணப் படும்.




உங்களின் முக்கியமான செயல் களை இன்று முடிக்க இயலாது. உங்கள் செயல்களை முன்கூட்டியே திட்டமிட்டால் வெற்றி அடையலாம்.

நீங்கள் பணியில் ஆழ்ந்து ஈடுபட்டி ருப்பீர்கள். பணிகளை மேற்கொள் ளும்போது சில சவால்களை சந்திக்க நேரும். சூழ்நிலைக் கேற்றவாறு வாழ வேண்டியது அவசியம்.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் சண்டை ஏற்படும். இதனால் உங்கள் துணை கவலை அடைய நேரும்.

இன்று பண வரவு உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவில் இருக்காது.நிதிநிலையில் ஸ்திரத் தன்மை காண்பதில் சில தடைகளை எதிர்கொள்ள நேரும்.

அமைதியாக இருந்தால் நீங்கள் ஆரோக்கியமாக இருக்கலாம். இன்று சற்று சோம்பலுடன் காணப்படுவீர்கள்.




இன்று பிரார்த்தனை மற்றும் தியா னம் ஆறுதலை அளிக்கும். எந்த விஷ யத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மூலம் மகிழ்ச்சி காணலாம்.

நீங்கள் இன்று பணிகளை திட்ட மிட்டபடி முடிக்க வேண்டும். மூத்தோர்களின் ஆலோசனை வழி காட்டும்.

உங்கள் விருப்பமின்றி வீட்டில் நடைபெறவிருக்கும் சுபநிகழ்ச்சி பற்றிய அதிருப்தி காணப்படும். உங்கள துணையிடம் கோபமாக நடந்து கொள்வீர்கள்.

இன்று வரவு செலவு இரண்டும் சேர்ந்து காணப் படும். உங்கள் குடும்பத்திற்காக அதிகமாக செலவு செய்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அஜீரணக் கோளாறு மற்றும் அசௌகரியம் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.10.2023




இன்று நிச்சயமற்ற தன்மையை உணர்வீர்கள். உங்கள் முயற்சிகளுக்கான பலனில் நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். அமைதியாக இருக்க வேண்டும்.

பணியில் கவனம் குறைந்து காணப்படும். எனவே கவனமாகப் பணியாற்ற வேண்டும்.

நீங்கள் இன்று சகஜமாகவும் உங்கள் துணையின் விருப்பப்படியும் நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

இன்று செலவினங்கள் அதிகமாக காணப்படும். எதிர்கால நலன் கருதி நீங்கள் பணத்தை சேமிக்க வேண்டும்.

இன்று முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்களை மிகவும் அலட்டிக் கொள்ளாதீர்கள். பிரார்த்தனை மூலம் மன அமைதி பெறலாம்.




உங்கள் மனதில் சில இலக்குகளை கொண்டிருப்பீர்கள். அவைகளை செயலாற்றுங்கள். அதனை எளிய வழியில் அடையலாம். பயணத்தின் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.பணிகளை உற்சாகமாக மேற்கொள்வீர்கள்.

நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்ல தொடர்பு கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்கும்.

இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் சுறுசுறுப்பும் காணப்படும்.




இன்று அனைத்தும் சுமூகமாக நாடாகும். நம்பிக்கை உணர்வு உங்களை வெற்றியை நோக்கி அழைத்துச் செல்லும்.

நீங்கள் இன்று பணியில் சிறந்து விளங்குவீர்கள். உங்கள் திறமைகளை காண்பிப்பீர்கள். அதே சமயத்தில் உங்களுள் இருக்கும் ஆற்றலைக் கண்டறிய முடியும்.

இன்று உங்கள் போக்கில் துணையின் மீது அன்பும் அக்கறையும் காணப்படும். நண்பரின் இல்ல திருமண விழாவிற்கு செல்வதன் மூலம் இருவரும் நெருக்கமாக காணப்படுவீர்கள்.

இன்று பணம் அதிகமாக காணப்படும். நிதி நிலைமை சுதந்திரமாக இருக்கும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




ஆன்மீக ஈடுபாடு வெற்றியை அளிக்கும். உங்களிடம் உறுதியும் காணப்படும்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். இறுக்கமான பணிகள் மற்றும் பணிச்சுமைகள் காரணமாக பணியில் தவறுகள் நேரலாம்.

நீங்கள் இன்று உணர்ச்சிவசப்பட்ட மன நிலையில் இருப்பீர்கள். சிறிய விஷயங்களைக் கூட தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக நீங்கள் அதிகமாக செலவு செய்ய நேரும்.

கண் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும். எனவே ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence


S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRAL PARK JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park